# முடிவுறுத்தல் நன்மைகளை விடுவித்தல்

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட 2023.03.29 ஆம் திகதிய SEC/2023/E/01 சுற்றறிக்கையில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாக 2023.04.01 இல் இருந்து செயல்வலுப்பெறும் வகையில் அமுல்படுத்தப்படும் மேற்கூறப்பட்ட சுற்றறிக்கையில் விசேடமாக குறிப்பிடப்பட்டுள்ள தொழில்வழங்குநர்களினால் ஊழியர்களுக்கு பின்வரும் முடிவுறுத்தல் நன்மைகளை விடுவிப்பதற்கு முன்னராக, இத்தகைய நன்மைகளிலிருந்து கீழ் குறிப்பிட்டவாறு பிடித்துவைக்கப்படுதல் வேண்டும்.

1. பின்வரும் கொடுப்பனவுகளின் மொத்த தொகை ரூபா 5,000,000/- ஐ விஞ்சுமிடத்து தொழில்வழங்குநர்கள் மேலதிகத் தொகையில் 12% இனை பிடித்துவைக்க தேவைப்படுத்தப்படுகின்றனர்.
    a. ஓய்வூதியம் ஒன்றை மாற்றியதில் செலுத்தப்படற்பாலதான தொகை
    b. இளைப்பாற்றுப் பணிக்கொடையொன்றாக செலுத்தப்படற்பாலதான தொகை
    c. உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்பட்டவாறான அனைத்து ஊழியர்களுக்கும் ஒரு சீராக ஏற்புடைய திட்டம் ஒன்றின் கீழ் பதவி அல்லது ஊழியத்தின் இழப்புக்காக நட்டஈடாக செலுத்தப்படற்பாலதான தொகை
    d. ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் இருந்து செலுத்தப்படற்பாலதான எந்தவொரு தொகை (1970) இன் பின்னர் நிதியத்தின் முதலீட்டு வருமானத்தின் பங்கு நீங்கலாக

2. தொழில்வழங்குநர்கள் பின்வரும் கொடுப்பனவுகள் அல்லது நன்மைகளில் இருந்து 36% இனை பிடித்துவைக்க தேவைப்படுத்தப்படுகின்றனர்.
    a. ஊழியர் நம்பிக்கை நிதியத்தில் இருந்து செலுத்தப்படற்பாலதான எந்தவொரு தொகை (1970) இன் பின்னர் நிதியத்தின் முதலீட்டு வருமானத்தின் பங்கு நீங்கலாக
    b. உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தினால் அங்கீகரிக்கப்படாத ஒழுங்குபடுத்தப்படாத சகாய நிதியமொன்றிலிருந்தான கொடுப்பனவு
    c. வேறு ஏதேனும் கொடுப்பனவுகள்
    d. இளைப்பாற்று காசற்ற தன்மைகள் (சந்தைப் பெறுமானத்தில் மதிப்பிடுதல் வேண்டும்)

அதற்கமைவாக ஊழியராகிய நீங்கள் இளைப்பாறிய திகதியில் இருந்து 90 நாட்களினுள் பணிப்புரையை பெற்றுக்கொள்வதற்கு அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ள இணை ஆவணங்களுடன் **முடிவுறுத்தல் நன்மைகளை விடுவிப்பதற்கான விண்ணப்பத்தை** சமர்ப்பிக்க தேவைப்படுத்தப்படுகின்றீர்கள்.

**அட்டவணை 1: முடிவுறுத்தல் நன்மைகளை விடுவிப்பதற்காக கையளிக்க வேண்டிய இணை ஆவணங்கள்**

| முடிவுறுத்தல் நன்மைகள் | பிடித்து வைக்கப்படும் வீதம் | தேவைப்படுத்தப்படும் ஆவணங்கள் |
|---|---|---|
| பணிக்கொடை *** | 12% | (2a) தேசிய அடையாள அட்டையின் பிரதி/ கடவுச் சீட்டின் பிரதி<br>(2b) தொழில்வழங்குநரால் வழங்கப்பட்ட பணிக்கொடை கொடுப்பனவு கடிதம் பணிக்கொடைத் தொகை ஒரு சீரான திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதா இல்லையா பிடித்துவைக்கப்பட்ட தொகை, பணிக்கொடை கணிக்கப்பட்ட விதம் அதாவது அடிப்படை சம்பளம் அல்லது தேறிய சம்பளம் என்பவற்றின் எதன் அடிப்படையில் கணிக்கப்பட்டது. சேவைக் காலம் என்பவை அடங்கலாக)<br>(2c) ஊ.ந.நி பங்களிப்பு<br>(2d)மூன்று (3) T-10 சான்றிதழ்கள் (நடப்பு மதிப்பீட்டாண்டிற்கான T-10 அடங்கலாக) |
| மாற்றப்பட்ட ஓய்வூதியம் *** | 12% | (3a) தேசிய அடையாள அட்டையின் பிரதி/ கடவுச் சீட்டின் பிரதி<br>(3b) தொழில்வழங்குநரால் வழங்கப்பட்ட மாற்றப்பட்ட ஓய்வூதிய கொடுப்பனவுக்கான கடிதம் (மாற்றப்பட்ட ஓய்வூதியத் தொகை ஒரு சீரான திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதா இல்லையா பிடித்துவைக்கப்பட்ட தொகை சேவைக்காலம் அடங்கலாக)<br>(3c) ஊ.ந.நி பங்களிப்பு<br>(3d)மூன்று (3) T-10 சான்றிதழ்கள் (நடப்பு மதிப்பீட்டாண்டிற்கான T-10 அடங்கலாக) |
| ஊழியர் நம்பிக்கை நிதியம் *** | 12% | (4a) தேசிய அடையாள அட்டையின் பிரதி/ கடவுச் சீட்டின் பிரதி<br>(4b) ஊ.ந.நி சபையினால் வழங்கப்பட்ட ஆவணம் (ஊ.ந.நி கடித தலைப்பில்)<br>(4c) சேவைக்காலம் 5 வருடங்களுக்கு அதிகம் எனில், விடயம் 2(b) இன் கீழ் பணிக்கொடை செலுத்தப்பட்டிருப்பின் பணிக்கொடைக் கொடுப்பனவின் விபரங்களைக் குறிப்பிட்டு தொழில்வழங்குநரிடம் இருந்தான கடிதம்<br>(4d) மூன்று (3) T-10 சான்றிதழ்கள் (நடப்பு மதிப்பீட்டாண்டிற்கான T-10 அடங்கலாக |
| நட்ட ஈடு | 36% (CGIR இனால் அங்கீகரிக்கப்படாதது)<br><br>12% CGIR இனால் அங்கீகரிக்கப்பட்டது எனின்) | (5a) தேசிய அடையாள அட்டையின் பிரதி / கடவுச் சீட்டின் பிரதி<br>(5b) தொழில்வழங்குநரினால் வழங்கப்பட்ட நட்ட ஈட்டு கொடுப்பனவுக்கான கடிதம் (நட்ட ஈட்டுத் தொகை பிடித்துவைக்கப்பட்ட தொகை சேவைக்காலம் அடங்கலாக)<br>(5c) வரிக்கான விலக்களிப்புகள் வழங்கப்பட்டிருப்பின் அதற்கான உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் கடிதம் |

| | | |
|---|---|---|
| | | (5d) மூன்று (3) T-10 சான்றிதழ்கள் (நடப்பு மதிப்பீட்டாண்டிற்கான T.10 அடங்கலாக)<br>(5e) உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தின் அனுமதி வழங்கப்பட்டிருப்பின் 2 மற்றும் இன் கீழ் நிரல்படுத்தப்பட்ட விடயங்கள் |
| தண்ணளிக் கொடுப்பன வுகள் *** | 36% | (6a) தேசிய அடையாள அட்டையின் பிரதி/ கடவுச் சீட்டின் பிரதி<br>(6b)தொழில்வழங்குநரினால் வழங்கப்பட்ட தண்ணளிக் கொடுப்பனவு மீதான கடிதம் (தண்ணளிக் கொடுப்பனவுத் தொகை பிடித்துவைக்கப்பட்ட தொகை சேவைக் காலம் என்பவை அடங்கலாக)<br>(6c)மூன்று (3) T-10 சான்றிதழ்கள் (நடப்பு மதிப்பீட்டாண்டிற்கான T-10 அடங்கலாக) |

*** சேவை பதிவுகள்/ சத்திய கடதாசி [முன்னைய இடங்களில் ஏதேனும் சேவைகள் இருப்பின், சேவை பதிவுகள்/ சத்திய கடதாசி என்பவற்றை சமர்ப்பிக்கவும் (சேவையில் இணைந்த திகதி ராஜினாமா செய்த திகதி, பணிக்கொடைத் தொகை மற்றும் ஊதிய தொகை அடங்கலாக)]

அத்தகைய விண்ணப்பங்கள் இங்கே கையளிக்கப்படுதல் வேண்டும்.

ஆணையாளர்
இசைவாணை & பணிப்புரை அலகு
தலைமைக் காரியாலயம் – 2 வது தளம்
உள்நாட்டு இறைவரி திணைக்களம்
சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்த
கொழும்பு 02

விசாரணைகளுக்கு, பின்வரும் உத்தியோகத்தர்களை தொடர்புகொள்ளலாம்.

| பதவிப்பெயர் | தொடர்பு இலக்கம் |
|---|---|
| ஆணையாளர் | 011 213 4204 |
| சிரேஷ்ட பிரதி ஆணையாளர் | 011 213 4265 |
| பிரதி / உதவி ஆணையாளர் | 011 213 4255, 011 213 4264 |